
௨
ஓம் குமராயநம:
திருப்புகழமிர்தம்
(மாத வெளியீடு)
9-3
திருப்புகழ் தொண்டன்
கிருபானந்த வாரி
திருப்புகழமிர்தம் காரியாலயம்,
காங்கேயநல்லூர்.
...RS ENGRAVERS MADRAS

சந்தா ரூ. 2-0-0.

## பொருளடக்கம்.


| | | | |
|---|---|---|---|
| திருப்புகழ் அகரமுமாகி | சகூ | கந்தர் திருவிளையாடல் | ருக |
| அலங்காரம் ஆலுக்கணிகலம் | ருரு | கற்பு | கூ௩ |
| உள்ளங் கவர் கள்வன் | எ௰ | | |


# ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் அவதார நல்விழா.

### அவதார நாள் தாரண ௵ ஆனி ௴ 22 ௨ புதன்கிழமை.

1. காங்கேயநல்லூரில் சிவத்திரு. மல்லையதாஸ் பாகவதர் அவர்களால் ஸ்ரீ முருகப்பெருமான் திருவாலயத்தில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பெறும்.

2. மோகனூர் (கரூர் சமீபமுள்ளது) காந்தமலையாண்டவன் சன்னிதியில் சிறந்த நிகழ்ச்சிகளுடன் நடைபெறும். விரிவுரைகள், இன்னிசையரங்குகள், பெரிய மேளக்கச்சேரி அன்னதானம் முதலிய பல விரிவான பகுதிகளைக்கொண்டு நிகழும்.

3. வயலூரில். தாராநல்லூர், திரு. சோமசுந்தரம் பிள்ளையவர்கள், திரு. அ. வேலுப்பிள்ளையவர்கள், நாச்சிக்குறிச்சி திரு. துரைசாமி நாடார் முதலிய அன்பர்களால் கொண்டாடப்பெறும்.

4. மதுரை திருநெல்வேலி முதலிய இடங்களில் திருப்புகழ் சபையார்களால் கொண்டாடப்பெறும்.

---

### கும்பாபிஷேகம்.

சிவத்திரு. மல்லையதாஸ் பாகவதர் அவர்கள் நன் முயற்சியால் தாரண வைகாசி 22 ௨ காங்கேயநல்லூரில் ஸ்ரீ சுந்தர விநாயகராலய கும்பாபிஷேகம் மிகச் சிறப்பாக நிகழ்ந்தது.

உ

ஓம் குஹாய நம:

# திருப்புகழமிர்தம்

(All Rights Reserved)

"திருப்புகழை மேவுகின்ற கொற்றவன் ருள்பெற்றுர்
திருப்புகழைக் கேளீர் தினம்"


| மலர் ௯. Vol 9. | தாரண ஹு ஆனி மீ 1௳ ஜூன் 1944 | இதழ் ௩. No 3. |
| --- | --- | --- |


## திருப்புகழ்

### பழமுதிர்சோலை.

அகரமு மாகி யதிபனு மாகி யதிகமு மாகி அகமாகி
அயனென வாகி அரியென வாகி அரனென வாகி
அவர்மேலாய்
இகரமு மாகி யெவைகளு மாகி யினிமையு மாகி
வருவோனே
இருநில மீது லெளியனும் வாழ எனதுமு னோடி
வரவேணும்
மகபதி யாகி மருவும்வ லாரி மகிழ்களி கூரும் வடிவோனே
வனமுறை வேட னருளிய பூஜை மகிழ்கதிர் காம
முடையோனே
செககண செகு தகுதிமி தோதி திமியென ஆடு
மயிலோனே
திருமலி வான பழமுதிர் சோலை மலைமிசை மேவு
பெருமாளே.

## பதவுரை.

அகரமும் ஆகி — எழுத்துக்களில் அகர எழுத்தாகியும், அதிபனும் ஆகி — எல்லாவுலகங்கட்குந் தலைவராகியும், அதிகமும் ஆகி — எல்லாவற்றிற்கும் மேம்பட்டவராகியும், அகம் ஆகி — முக்தி வீடாகியும், அயன் என ஆகி — நான்முகனாக நின்று உலகத்தைப் படைத்தும், அரி என ஆகி — திருமாலாக நின்று உலகத்தைக் காத்தும், அரன் என ஆகி — உருத்திர மூர்த்தியென நின்று எல்லாவற்றையும் அழித்தும், அவர் மேலாய் — அம்மூவர்க்கு மேலான முதல்வராகியும், இகரமும் ஆகி — சமீபத்தில் இருப்பவருமாகியும், எவைகளும் ஆகி — எல்லாப் பொருள்களுமாகியும், இனிமையும் ஆகி — இனிமையாகியும், வருவோனே — வருபவரே! மகபதி ஆகி மருவும் — நூறு அஸ்வமேதயாகங்களைச்செய்து யாகபதியாக விளங்கி, வல அரி — வலன் என்ற அசுரனைக் கொன்ற இந்திரன், மகிழ் களி கூரும் வடிவோனே — மிக்க மகிழ்ச்சியடையும் பேரழகுடையவனே! வனம் உறை வேடன் அருளிய பூஜை — காட்டில் வாழுகின்ற வேடுவன் செய்தருளிய வழிபாட்டை, மகிழ் — களிப்புடன் ஏற்றுக்கொண்ட, கதிர்காமம் உடையோனே — கதிர்காமம் என்னுந் திருத்தலத்தை உடையவரே! செககண சேகு தகுதிமி தோதி திமி, என ஆடும் — என்ற தாள இசையுடன் நடனஞ் செய்கின்ற மயிலோனே — மயில்வாகனத்தையுடையவரே! திருமலிவு ஆன — செல்வம் மலிந்து கிடக்கும், பழமுதிர் சோலை மலை மிசை மேவு — பழமுதிர் சோலை மலை மீது எழுந்தருளியுள்ள, பெருமாளே — பெருமையின் மிக்கவரே! இரு நில மீதில் — பெரிய நிலவுலகத்தின் கண், எளியனும் வாழ — எல்லோரும் உய்வு பெறுவதுடன் அடியேனும் உய்ந்து ஈடேறும் பொருட்டு, எனது முன் ஓடி வரவேணும்.

## பொழிப்புரை.

எழுத்துக்களில் முதன்மை பெற்ற அகர எழுத்தாகியும், எல்லா வுலகங்கட்குந் தலைவராகியும், எல்லாவற்றிற்கும் மேம்பட்டவராகியும், பரகதியாயும், நான்முகனாகியும், திருமாலாகியும், உருத்திரமூர்த்தியாகியும், அம்மூவருக்கும் மேற்பட்டவராகியும், சமீபத்தில் உள்ளவராகியும், எல்லாமானவராகியும், இனிமையாக விளங்குபவருமாகியும் வருபவரே! நூறு அசுவமேதயாகங்களைப்புரிந்து மகபதியென்று பேர் பெற்றவனும் வலன் என்ற அசுரனைக் கொன்றவனும் ஆகிய தேவர் கோமான் மிக்க மகிழ்ச்சி

யுறுகின்ற கட்டழகுடையவரே! வனத்தில் வாழுகின்ற வேடன் செய்த வழிபாட்டை ஏற்று மகிழ்ந்து அருள் புரிந்த கதிர்காமம் என்னும் திருத்தலத்தை யுடையவரே! செககண சேகு தகுதிமி தோதி திமி என்ற தாள இசையுடன் ஆடுகின்றமயிலை வாகனமாகஉடையவரே! செல்வம் மலிந்துள்ள பழமுதிர் சோலை யென்னுந் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள பெருமித முடையவரே! பெரிய நிலவுலகின்கண் எல்லோரும் ஈடேறவும் அடியேன் உய்வு பெறவும் என்முன் ஓடி வந்து ஆட்கொள்ளவேண்டும்.

## விரிவுரை.

அகரமுமாகி:—

அகரமுதல எழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு

என்ற தெய்வப்புலவர் திருவாக்கை யறியாதார் யார்? எழுத்துக்களெல்லாம் அகரத்தை முதலாக வுடையது. அகரமின்றி ஏனைய எழுத்துக்கள் இயங்காது; இறைவனின்றி உலகமும் உயிரும் இயங்கா. அகரமும் எல்லா எழுத்துக்களில் சிவணிக்கொண்டிருக்கின்றது; இறைவனும் எல்லாப் பொருள்களிலும் சிவணி நிற்கின்றனன்; யாதொரு முயற்சியுமின்றி வாய் திறந்த மாத்திரத்தில் அகர உச்சரிப்பு உண்டாகின்றது; அதுபோல் இறைவன் தானே இயங்குபவன்; அகரத்திற்குள் அ, உ, ம, என்ற மூன்றெழுத்தும் அடங்கியிருப்பதை நுனித்துணர்க. அதுபோல் இறைவன் முத்தொழிலையும் இயற்றுபவன்; அகரத்திற்குள் ஒருபகுதியுள் அருளெழுத்தாகிய வகரமும் அடங்கியிருக்குமாறு காண்க; இறைவனும் அருளோடு கூடியிருப்பவன். அகரம் தூரத்திலுள்ள பொருளைச் சுட்டுவது; அதுபோல் இறைவனும் தூய்மையில்லாதார்க்குச் சேய்மையிலுள்ளவன்.

அகர உயிர்போல் அறிவாகி எங்கும்
நிகரில்இறை நிற்கும் நிறைந்து.

—திருவருட்பயன்

பேராய வண்டங்கள் பலவும் பிண்ட பேதங்கள் பற்பலவும் பிண்டாண்டத்தின்
வாராய பல பொருளுங்கடலு மண்ணுமலை யுளவுங்கட லுளவு மணலும்வானு
மூராதவான் மீனுமணுவுமற்றை யுள்ளனவுமளந்திடலா மோகோவுன்னை
யாராலு மளப்பரி தென்றனந்த வேதமறைந்திளைக்கவதி தாரமாகுந்தேவே.
அகரமென வறிவாகி யுலகமெங்கு மமர்ந்தகர வுகரமக ரங்க டம்மாற்
பகருமொரு முதலாகி வேறு மாகிப் பல்வேறு திருமேனி தரித்துக்கொண்டு
புகரில்பொரு ளுன்கிளையு மிடர்தீர்ந் தெய்தப் போற்றுநருக் கறக்கருணை புரிந்தல் லார்கு
நிகரின்மறக் கருணைபுரிந் தாண்டுகொள்ளு நிருமலனைக் கணபதியை நினைந்து வாழ்வாம்.

—விநாயக புராணம்.

அதீபனுமாகி :—

முருகப்பெருமானே தனிப்பெருந் தலைவர்;

"எந்தக் கடவுளும் என் கோள் போழ்
கந்தக்கடவுளை மிஞ்சாதே"

என்றூர் பாம்பனடிகள்.

"அரனுர்க் கதிக பொருள் காட்டதிப
அடியார்க் கெளிய பெருமாளே"

என்று அருணகிரியார் கூறும் அருமையினும் அருமை யாகிய அருள்வாக்கை யுன்னுக.

அதிகமுமாகி :—

எல்லாவற்றிற்கும் மேம்பட்டவர் குமாரமூர்த்தி;

"சுக்குக்கு மிஞ்சிய வைத்தியமுமில்லை
சுப்ரமண்யருக்கு மிஞ்சிய தெய்வமுமில்லை"

என்ற பழமொழியும் சுருதி வாக்கியங்களும் இதனை வற்புறுத்தும்.

"அதிகா அநகா அபயா அமரர்
பதி கா வலசூர பயங்கரனே" —அநுபூதி.

அகமாகி :—

அகம் - வீடு; இது முத்தி வீட்டைக் குறிக்கின்றது; முத்தி வீட்டிற்குத் தலைவனும் முத்திவீடாக விளங்குபவனும் முருகனேயாகும்.

" கதிக்கு நாதனே "
" தெரிசன பரகதியானாய் "

என்ற அருள் வாக்குகளை யுய்த்துணர்க.

அயனெனவாகி அரியெனவாகி
அரனெனவாகி அவர் மேலாய் :—

பிரமதேவராகவும் திருமாலாகவும் உருத்திரராகவும் நின்று முத்தொழிலை யியற்றுபவர் முருகப்பெருமானே.

இதனை திருமால் இந்திரனிடங் கூறுமாறு காண்க.

பொன்னுரு வமைந்த கஞ்சப் புங்கவ னாகி நல்கும்
என்னுரு வாகிக் காக்கும் ஈசன்போ லிறுதி செய்யும்
மின்னுரு வென்ன யார்க்கும் வெளிப்படை போலு மன்னோன்
தன்னுரு மறைக ளாலுஞ் சாற்றுதற் கரிய தன்றே.

மூவராகியும் மூவர்காணாதமுதலாகியும் எம்பெருமான் விளங்குகின்றனன் என்பதனைப் பல இடங்களிலும் சுவாமிகள் கூறுவன ஆங்காங்கு காண்க.

" படைத்தளித் தழிக்குந் த்ரிமூர்த்திகள் தம்பிரானே "
" மன்று வயற்பதி மன்று குறத்தியின்
மன்று மூவர்க் கொரு தம்பிரானே "
" அரியர பிரமபுரந்தராதியர் கும்பிடுந் தம்பிரானே "

—திருப்புகழ்.

இகரமுமாகி :—

ஓராதார்க்குத் தூரமாகின்ற இறைவன் உன்னுவார்க்கு அதி சமீபத்தில் இருக்கின்றான்.

" வீசத்தில் தூர மிலாதது "

—திருப்புகழ்.

எவைகளுமாகி :—

முருகன் அங்கிங் கெனாதபடி எங்கும் நிறைந்து விளங்குபவராதலால் " எவைகளுமாகி " என்றார்.

"எப்பொருளுமாய" என்றார் பிறிதோரிடத்தில்.

**இனிமையுமாகி :—**

முருகன் அன்பர்கள் உணர்வில் இனிக்கும் இனியனாய் இலங்குகின்றனன்.

கனியினும் இனியன்; கட்டிபட்டகரும்பினும் இனியன்; பனிமலர்க்குழல் பாவையரினும் இனியன்; தனிமுடி கவித்தாளும் அரசினும் இனியன்; உயிரினும் இனியன்;

> கனியினுங் கட்டிபட்ட கரும்பினும்
> பனிமலர்க்குழல் பாவை நல்லாரினும்
> தனிமுடி கவித் தாளு மரசினும்
> இனியன் றன்னடைந்தார்க்கிடைமருதனே.
> என்னி லாரு மெனக்கினி யாரில்லை
> என்னி லும்மினி யாவெளரு வன்னுளன்
> என்னு ளேயுயிர்ப்பாய்ப்புறம் போந்துபுக்
> கென்னு ளேநிற்கு மின்னம்ப ரீசனே.
>
> —அப்பர்.

**எளியனும் வாழ எனதுழனோடி வரவேணும் :—**

எளியனும் என்ற எச்சஉம்மையால் மற்ற ஆன்மாக்களும் என்று வருவிக்கப்பட்டது. வையகமெல்லாம் வாழவேண்டுவதே ஆன்றோர் மரபு. "வையகமும் துயர் தீர்க" என்றார் திருஞானசம்பந்தர்.

விரைந்து இறைவனைக்காண விரும்புகின்றார் ஆதலின் "ஓடிவரவேணும்" என்று அழைக்கின்றார்.

**வனமுறை வேடனருளிய பூஜை மகிழ் கதிர்காமம் :—**

இது கதிர்காமம் என்ற ஈழநாட்டுத் திருத்தலத்தில் ஒரு வேடன் அன்புருவாகிப் பூசித்து அருள்பெற்ற வரலாற்றைக் குறிக்கின்றது.

## கருத்துரை.

**எல்லாமாய்நின்ற இறைவரே! கட்டழகுடையவரே! கதிர்காம வேலவரே! மயிலேறும் வள்ளலே! பழமுதிர்சோலை மேவும் பரமரே! உலகமும் அடியேனும் வாழ என்முன் விரைந்து வந்தருள்வீர்.**

ஓம் குஹாய நம:

# கந்தரலங்காரம்

ஆலுக் கணிகலம் வெண்டலை மாலை அகிலமுண்ட
மாலுக் கணிகலந் தண்ணந் துழாய் மயி லேறுமையன்
காலுக் கணிகலம் வானோர் முடியுங் கடம்புங்கையில்
வேலுக் கணிகலம் வேலையுஞ் சூரனு மேருவுமே. (கூஉ)

பதவுரை.

ஆலுக்கு அணிகலம் - சிவபெருமானுக்கு பூணாக விளங்குவது, வெண் தலை மாலை - வெண்மையான (பிரமதேவர்களின்) தலை மாலையாகும்; அகிலம் உண்ட மாலுக்கு அணிகலம் - உலக மெல்லாவற்றையும் விழுங்கின திருமாலுக்குப் பூணாக விளங்குவது, தண் அம் துழாய் - குளிர்ந்த அழகிய துளவ மாலையாகும்; மயில் ஏறும் ஐயன் - மயில் வாகனத்தின் மீது ஏறிவருகின்ற தனிப்பெருந்தலைவராகிய முருகப்பெருமானுடைய, காலுக்கு அணிகலம் - திருவடிக்குப் பூணாக விளங்குவன, வானோர் முடியும் கடம்பும் - தேவர்களின் மணி முடிகளும் அவர்கள் சூட்டும் கடப்பமலர் மாலையும், கையில் வேலுக்கு அணிகலம் - அவருடைய திருக்கரத்திலுள்ள வேலாயுதத்திற்குப் பூணாக விளங்குவன, வேலையும் - கடலும், சூரனும் - சூரபன்மனும், மேருவும் - மாமேரு மலையும் ஆகும்.

விரிவுரை.

ஆலுக்கு அணிகலம் வெண்டலைமாலை :—

ஆல் - கல்லாலமரம்; கல்லாலின் கீழ் சிவபெருமான் எழுந்தருளியிருப்பதனால் இடவாகு பெயராக ஆலுக்கு என்றனர். ஆலகாலவிடத்தை யுண்டதனால் ஆலன் என்று பேருண்டாயிற்றென்றும் அது ஆல் என்று குறுகிற்றென்றும் கூறுவாரும் உளர்.

பிரமன் "நானே உலகங்களையெல்லாம் படைக்கின்றேன்; படைப்புத் தொழிலுக்கு நானே தலைவன்" என்று தருக்குற்றனன். அதுகண்டு சிவபெருமான் வைரவரை

ஏவி நடுத்தலையைக்கிள்ளி வரச்செய்து, ஏனையோரும் அங்ஙனம் தருக்குறுதிருக்கும் பொருட்டு அதனை மார்பில் தரித்தனர். அப்படி ஒவ்வொரு கற்பத்திலும் உண்டாகும் பிரமர்களின் தலைகளையெல்லாம் மாலையாகக் கோத்துத் தரித்தனர்.

நல்ல மலரின் மேல் நான்முகனார் தலை
ஒல்லை யரிந்த தென் றுந்தீபற
உகிரா லரிந்ததென் றுந்தீபற.

அதனால் படைத்தல் காத்தல் அழித்தல் ஆகிய முத் தொழிலுக்கும் முதல்வர் சிவபெருமானே என்பது தெற்றென விளங்கும். அயன் அரி அரன் என்ற மூவரும் முக்கட் பெருமான் திருவருளைத்தாங்கிய முத்தொழில்களையும் இயற்றுகின்றனர்.

படைப்பானுங் காப்பானும் பார்க்கி லருணேசன்
படைப்பா னயனென்றல் பாவம்—

—அருணகிரியந்தாதி

அகிலமுண்ட மாலுக்கணிகலம் தண்ணந்துழாய் :—

உலகமுண்டவராதலால் திருமாலை "அகிலமுண்ட மால்" என்றனர். அவருக்குப் பூண் துளவமாலை பச்சை நிறமுடைய பகவான் பச்சையாகிய துளவமாலையை யணிந்துகொள்வது பொருந்துவதேயாம். வில்வம் தட்பத்தைத் தருவது; துளவம் வெப்பத்தைத் தருவது. நெருப்புவடிவாகிய சிவபெருமான் வில்வத்தையும் நீர் வடிவாகிய திருமால் துளவத்தையும் அணிவதன் அருமையை நுனித்துணர்க.

மயிலேறும் ஐயன் :—

மயில் பிரணவமந்திரம்; மயில் ஆடும்போது உற்று நோக்குக. ஆடுகின்ற மயிலின் தலையில் சுழித்து பின்னே விரிந்து தோகையை வளைத்து காலில்வந்து ஓ என்று முடித்துக்கொள்க. அந்த ஓங்காரத்திற்கு நடுவே அருட் பெருஞ்ஜோதியாகிய ஆண்டவன் வீற்றிருக்கின்றான்.

"ஆனதனிமந்த்ர ரூபநிலை கொண்ட
தாடுமயிலென்ப தறியேனே"
—திருப்புகழ்.

ஐயன் என்பதில் அன் என்பது ஆண்பால் ஒருமை விகுதி; அது நீங்க ஐ என்ற பகுதி நிற்கின்றது. ஐ என்பதற்கு இறைவன் என்பது பொருள். இறைவன் அகர எழுத்துப்போல் உலகத்தை யியக்குகின்றனன். கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் தங்கருத்தின் நோக்கரிய நோக்காக விளங்குபவன். ஆதலால் இறைவன் அகர உயிர்போன்றவன். அப்பாலைக்கப்பாலாக விளங்குபவன். ஆதலால் தூரத்திலுள்ள பொருளைச்சுட்டும் அகர உயிர் இறை; உயிர் இகர உயிர்; உலகம் யகர உயிர் மெய். உலகம் நன்குகக் காணப்படுவது; உயிர் சிறிது புலப்படுவது இறை மிக நுணுக்கமாக உணர்ச்சியில் புலப்படுவது. ஐ என்ற எழுத்தைக் கவனியுங்கள். அதில் சுழி அகர எழுத்தையும், நடுப்பகுதி இகரத்தையும், கீழ்ப்பகுதி யகரத்தையும் தெரிவிக்கும். இகரத்தையும் யகரத்தையும் கீழ்ப்படுத்திக்கொண்டு அகரமேற்பட நிற்கின்றது. அதுபோல் பசுபாசத்திற்கும் இறைவன் பதியாக விளங்குகின்றனன். அதனால் இறைவனுக்கு ஐ என்ற பேருண்டாயிற்று.

காலுக்கணிகலம் வானோர் முடியுங்கடம்பும் :—

முருகக் கடவுளின் திருவடிக்கு அணிகலம் தேவர்களின் திருவடிகளும் கடப்பமலர் மாலையுமாம்.

குமரக்கடவுளைச் சேவிக்கும் பொருட்டு மாலயனாதி வானவர்கள் கடப்ப மலர்மாலையுடன் வருகின்றனர். முப்பத்துமுக்கோடி தேவர்களாதலின் தனித்தனியே வணங்குதற்கு காலந் தாழ்க்குமாதலால் சேர்ந்தாப்போல வணங்குமாறு வீரவாகுதேவர் பணித்தலால் எல்லோரும் கரத்திலுள்ள கடப்பமாலையை ஆண்டவன் திருவடியில் அணிந்து வரிசையாக வீழ்ந்து வணங்குவர். அதனால் ஆண்டவன் திருவடியில் கடப்பமாலையும் வானோர் மணி

மகுட மாலையும் ஆபரணமாக விளங்குகின்றன. தேவர்கள் கூட்டமாகச் செல்லுங் காட்சியும் வரிசையாக மலர் மாலை யிட்டு வணங்கு மாட்சியும் அருணகிரிநாதருக்கு அகக்காட்சியில் காண்கின்றன.

**கையில் வேலுக்கணிகலம் வேலையும் சூரனும் மேருவுமே :—**

முருகன் திருக்கரத்தில் அணிசெய்யும் வேலாயுதத்திற்கு அணிகலங்களாவன கடலும் சூரனும் மேருவும் ஆம்.

சூரபன்மன் இறுதியில் கடலில் ஒளிந்தனன். வேலாயுதம் கடலை வற்றச்செய்து சூரனுகத்தைப் பிளந்து மேருகிரியைத் துளைபடுத்தியது.

" அண்டங்க ளொருகோடி யாயினுங் குலகிரி
யநந்தமா யினுமேவினு
லடையவுரு விப்புறம் போவதல் லதுதங்க
லறியாது சூரனுடலைக்
கண்டம் படப்பொருது காலனுங் குலைவுறுங்
கடியகொலை புரியமதுசெங்
கனகா சலத்தைக் கடந்துமுனை யிட்டுக்
கடுகின்ற துங்கநெடுவேல் "

—வேல்விருத்தம்.

கடல் - என்பது பிறவி, சூரன் - ஆணவமாம், மேரு அகங்காரம். ஆக மூன்றையும் ஞானமாகிய வேல் வென்றது.

## கருத்துரை.

சிவமூர்த்திக்குப் பூண் தலைமாலை; திருமாலுக்குப் பூண் துளவம்; முருகவேளுக்குப் பூண் வானோர் முடியுங்கடம்பும்; வேலுக்குப் பூண் கடலும் சூரனும் மேருவுமாம்.

ஓம் குஹாய நம:

# கந்தர் திருவிளையாடல்

ஈழநாட்டிலே கதிர்காமம் என்னுந் திருத்தலம் மிகப்புனிதமானது. அது இலங்கையின் தென் கோடியில் விளங்குகின்றது. அடர்ந்த காட்டுக்குள் இத்தலம் இருக்கின்றது. மலைகள் சூழ்ந்திருக்கின்றது. கதிர்காமக் கோயிலுக்கு அருகில் மாணிக்கநதி மிகத் தூய்மையாக ஓடுகின்றது. அதில் மீன்கள் யாதொரு பயமுமின்றி குழந்தைகளைப்போல் குதித்து விளையாடிக்கொண்டிருக்கின்றன. முருகப்பெருமான் சூரசம்மாரத்தின் பொருட்டு போர்க்கோலத்துடன் சென்றபோது தங்கியிருந்த பாசறை யாகும். பிரபரந்திர க்ஷேத்திரம். யானை புலி சிங்கம் கரடி முதலிய விலங்கினங்கள் திரள் திரளாகச் சஞ்சரிக்கும் பெரிய வனம் அதனைச் சூழ்ந்திருக்கின்றது.

இத்தகைய காட்டில் ஒரு வேடன் வாழ்ந்துகொண்டிருந்தான். அவனுக்குப் பண்டைப் பிறப்பிற் செய்த புண்ணிய வசத்தால் முருக பக்தி யுண்டாயிற்று. "முருகா! முருகா!" என்று இடையறுது சொல்லி யுருகுவான். வேட்டையாடுவதும், கதிர்காம வேலவரைப் பூசிப்பதுவுமே அவனுடைய வேலை. எபபோதும் அவன் மனம் ஆண்டவனையே நாடிக்கொண்டிருந்தது. வேட்டையாடுகின்றபொழுதும் "முருகா, முருகா" என்று அவன் வாய் ஓழியாது சொல்லிக்கொண்டிருக்கும்: கர்ப்பிணிகள், நோய்வாய்ப்பட்டவை, இளங்குட்டிகள், கிழப்பருவமுற்றவை ஆகிய விலங்குகளைக் கொல்லமாட்டான். சிறந்த மனமும் நிறைந்த வலிமையும் படைத்தவன்.

அவன் நாள்தோறும் அதிகாலையில் எழுந்து மாணிக்க நதியில் நீராடி, மொட்டறுததும் வண்டுகள் மொய்க்காததுமாகிய நறுமலர்களையும் பச்சிலைகளையும் பறித்து

குடத்தில் நீரெடுத்து, கதிர்காமப் பெருமானை அன்புடன் நீராட்டி, பச்சிலையும் மலரும் சூட்டி, "ஆறுமுகத்தரசே! அருட்கடலே! அமரர் வணங்கும் குமரநாயகா! நின் பாதமே துணை; ஏழையைக் காத்தருள்வாய்" என்று துதிப்பான்; தொழுவான்; அழுவான்; முருகன் பதமலர் மீது விழுவான்; மீளவும் எழுவான். "எம்பெருமானே! அடியேன் உன்னை நாள்தோறும் பூசித்தல் வேண்டும் என் உயிர் உள்ளநாள்வரை உன்னைப் பூசியாமல் உணவு கொள்ளமாட்டேன். நான் பாயும் படுக்கையுமாகக் கிடந்து நோய்வாய்ப்பட்டு துன்புற்று மரணமடையக் கூடாது. உயிர் பிரியும் நாள் எந்தநாளோ அந்த நாளிலும் உன்னைப் பூசிக்கவேண்டும்" என்று விண்ணப்பம் புரிவான். அன்பின் வடிவாக விளங்கினான்.

ஒருநாள் விடியற்காலையில் எழுந்து வில்லம்புகளை யெடுத்துக்கொண்டு புறப்பட்டான்; சகுனங்கள் சரியாக இல்லை; மாணிக்க நதி போய் அதில் "முருகா முருகா" என்று முழுகினான். அதன் கரையில் பூத்திருக்கும் நறுமலர்களை எடுப்பானாயினான். அது சமயம் வில்லம்பை ஒருபுறத்தே வைத்திருந்தான். நிராயுதனாக இருந்தனன். குமரி இருட்டு என்கிறார்களே அந்த இருள் சூழ்ந்திருந்தது. திடீரென்று ஒரு சிங்கம் அவன் பின்புறமாக ஓடிவந்து அவனைப்பற்றிக்கொண்டது. அறைந்து அவன் உடம்பைக்கிழித்து உண்ணுதற்கு எண்ணி கையை ஓங்கிற்று. பல சிங்கங்களைக் கொல்லுந் திறம் அவனுக்கிருந்தும், ஆயுதமின்மையால் அகப்பட்டுக்கொண்டான். "முருகா முருகா" என்று இறைவனை அழைத்தான். "அந்தோ! என் உயிர் போவதற்கு நான் அஞ்சவில்லை. இன்று முருகனை வழிபாடு செய்யாமல் என் உயிர் போகின்றதே. கதிர்காமக் கடவுளே! கருணாமூர்த்தி!" என்று கதறினான். சிங்கத்தை நோக்கி "ஏ விலங்கரசே! உனக்கு வணக்கம். எடுத்த இம்மலர்களை எங்கள் ஆண்டவராகிய கதிர்காமத்தையனுக்கு அர்ப்பணஞ்

செய்துவிட்டு வந்துவிடுகிறேன். பிறகு நீ என்னைப் புசித்துப் பசியாறலாம்" என்று கெஞ்சிக்கேட்டான்.

சிங்கம் சிரித்து "ஓ வேடனே! நீ எங்களுக்குப் பகைவன். நான் செய்த புண்ணியத்தால் நீ இப்போது அகப்பட்டுக்கொண்டனை. உன்னை விட்டுவிட்டால் நீ ஆயுதங்களை யெடுத்துக்கொண்டுவந்து என்னைக் கொன்றுபோடுவாய்; ஆதலால் நான் உன்னை விடமாட்டேன்" என்றது. வேடன், "சிங்கமே! நீ அப்படி நினையாதே நான் ஒருபோதும் சொல் தவறமாட்டேன் உனக்கு நான் உணவாக ஆகின்றேன். என்னையனைப் பூசித்துவிட்டு வந்துவிடுகிறேன். என்னுண்டவனுக்கு என்று எடுத்த மலர் வீணாகக்கூடாது. உனக்குக் கோடி வந்தனம். ஆறுமுகப் பெருமான் ஆறெழுத்து சாட்சியாக நான் திரும்பவந்து உனக்குப் பசியாற என் உடம்பைத் தருவேன். சத்தியம்" என்றான். சிங்கம், "சரி; நீ போய் செய்யவேண்டியதைச் செய்துவிட்டு சீக்கிரம் வா" என்று அவனை விட்டுவிட்டது. எமன் கையிலிருந்து மீண்ட உயிர்போல் வேடன் மீண்டான். மிக்க உவகையடைந்தான். பத்திர புஷ்பங்களை யெடுத்துக்கொண்டு கோயிலுக்கு ஓடினான். ஆண்டவன்மீது நீர் சொரிந்தான். மலர்களைச் சூட்டினான். கண்களிலிருந்து நீர் பெருக அதனாலும் ஆண்டவனை அபிஷேகஞ் செய்தான்.

"என்னப்பனே! நான் முடிவாக உனக்குச் செய்யும் பூசை இதுவே. எம்பெருமானே! இனி யார் பூசிக்கப் போகின்றார்களோ? ஆண்டவனே! உன்னைப் பூசிக்கும் புண்ணியம் இன்றோடு எனக்கு முடிவுபெற்றது. பன்னிரு கண்களையுடைய பரம கருணாநிதி! என் உயிர் திருவடி நிழலையடைவதாக" என்று உள்ளம் உருகித் துதித்தான். பலமுறை யாண்டவனை உற்று உற்று நோக்கினான். "என்னப்பனே! போகின்றேன்" என்று கைகூப்பி வணங்கிப் புறப்பட்டான். அவனுடையமனத்தில் ஆயுதமெடுத்து

சிங்கத்தைக் கொன்றுவிடலாமென்ற எண்ணம் உண்டாக வில்லை. "இறைவனைப் பூசிப்பதற்கு விடைகொடுத்த அப்புண்ணிய விலங்குக்கு இரையாக இந்த உடம்பு என்ன புண்ணியஞ் செய்ததோ? நான் ஆண்டவனைக் கேட்டுக் கொண்டவாறு உயிர் பிரியப்போகும் இன்று இறை வழிபாடு முடிந்தது" என்று மகிழ்ந்தான். சிங்கம் இருக்கும் இடத்தையடைந்தான். "ஓ உத்தம விலங் கரசே! உன் கருணையால் யான் எமது கதிர்காமக் கடவுளை தலையாரக்கும்பிட்டு வாயார வாழ்த்தி நெஞ்சார நினைத்து பூசித்தேன். அந்த உபகாரத்திற்காக நான் மிகவும் நன்றி யுடன் தொழுகின்றேன். இனி நீ என்னை யருந்திப் பசி யாறலாம்" என்று அதனிடம் வந்து தலைசாய்த்து நின்றான். உடனே சிங்கம் மறைந்தது. பச்சைமயில் வாகனத்திலே பன்னிருபுயங்களுடனும் ஞானசக்தியுடனும் வல்லி தேவ சேனு சமேதராக கந்தப்பெருமான் காட்சி கொடுத்தான். புத்தேளிர் பூமழை பொழிந்தனர். வேடன் வேலவரைக் கண்டு ஆடினான், பாடினான்; ஓடினான். என்னையனே! கற்பகோடிகாலம் கனல் நடுவே காயந்தேயத் தவம்புரி வோர்க்கும் ஒளித்து நின்ற நீ இவ்வேழைக்கிரங்கி வந்தனையே! என்னே நின் கருணை?

கருணைக் கடலே கதிர்காம வேலா
தருண மெனக்கருள்செய் தாயே—அருணலமார்
தங்கமே ஆறுமுகத் தற்பரமே மெஞ்ஞானச்
சிங்கமே நின்னடிசேர்ந் தேன்.

என்று துதித்தான். கதிர்காமக் கருணைக் கதிர்வேலர் அவனைத் தன் பொன்னடியின்கீழ் வாழ அருள்புரிந்தனர்

"வனமுறை வேடன் அருளிய பூசை
மகிழ் கதிர் காமம் உடையோனே"

உ

முருகா.

# கற்பு.

அடியார் மனம்போல் பரிசுத்தமாக நிலவு ஒளிசெய்துக் கொண்டிருந்தது. நீலத்திரையிலே வெண்முத்துக்களைப் பதிய வைத்தாற்போல் வானத்தில் நட்சத்திரங்கள் விளங்கின. இளங் குழந்தைகள் தளர்நடையிடுவதுபோல் தென்றல் மெல்ல அசைந்து அசைந்து வீசிற்று. மூன்றாவது மாடியில் நிலா முற்றத்தில் சாய்வு நாற்காலியில் மகுடேஸ்வரன் சாய்ந்து சந்திரனைப்பார்த்து உள்ளங்குளிர்ந்து மோகன ராகத்தில்,

நிறைமதி முகமெனும் ஒளியாலே
நெறிவிழி கணைபுரி நிகராலே
உறவுகொள் மடவர்கள் உறவாமோ
உனதிரு வடியினில் அருள்வாயே
மறைப்பயில் அரிதிரு மருகோனே
மருவல ரசுரர்கள் குலகாலா
குறமகள் தனைமணம் அருள்வோனே
குருமலை மருவிய பெருமாளே.

என்ற அழகிய திருப்புகழை இனிது பாடிக்கொண்டிருந்தான். அவனுடைய மனைவி மாதினியாள் கணவனுடைய பாடலைக் கேட்டு மேல்மாடிக்குச்சென்று புன்முறுவலுடன் "மிக்க அருமையான பாடல்; சுகமாகப் பாடுகின்றீர். சிந்தையும் செவியும் ஒருங்கே குளிர்கின்றன" என்று கூறி கணவன் அருகில் இருந்தனள். இயற்கையாகவே பொலிகின்ற அவளுடைய அழகு சந்திரகாந்தியால் மேலும் மிகுதியாகப் பொலிவுற்றது.

மகுடேஸ்வரன்:— பெண்ணே! இதோ இந்த வானத்தைப் பார்; கவிவாணர்கள் உள்ளம்போல் பரந்திருக்கின்றது; உன்னுடைய முகம்போல் இந்த சந்திரன் குளிர்ந்திருக்கின்றான். உன்னுடைய வெள்ளிய பற்களைப்போல் இந்த உடுக்குலங்கள் ஒளிர்கின்றன. கண்ணே! எனக்கு ஒன்று தோன்றுகின்றது. பெண்கள் அய்மை

யானவர்கள். பெண்கள் முகத்திற்கு சந்திரனை உபமான மாகக் கவிகள் கூறுகின்றனர். ஆடவர் முகத்தை சந்திரனைப்போன்றதென யாருங் கூறக்கேட்டிலேன். அதனாலேயே பெண்ணின் பெருமை வெளியாகின்றது.

மாதினியாள் :— நாதா! தாங்கள் அப்படி நினைக்கவேண்டாம் ஆடவரிலுந் தூய்மையாளருண்டு. பெண்களிலும் பொல்லாதவர்களுண்டு. முந்திய காலத்தில் கவிபாடுகின்ற புலவர்களிற் பலர் காமிகளாக இருந்தனர். அவர்கள் ஓயாது பெண்களின் கண்களையும் பல்லையும் மூக்கையும் கூந்தலையும் பலப்பல வகையாக வர்ணனை செய்து விளையினர்.

கணவனுக்கு அன்பு செய்து கருத்தொருமித்து நடந்து கற்பொழுக்கத்திற் தவறாத பெண்களைப் புகழ்வது சிறப்புடைத் தாம். அதைத்தான் திருவள்ளுவ தேவரும்,

பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பெனுந்
திண்மை யுண்டாகப் பெறின் என்றார்.

கற்பொழுக்கமில்லாத பெண்கள் பேயினும் பொல்லாதவர் என்று உதாரணமாகக் கூறுவேன்.

வேளூர் என்ற ஊரில் வெங்கடேச பிள்ளை யென்பவர் ஒருவரிருந்தார். அவர் பரம சாது, எப்போதும் இனிமையாகப் பேசுபவர்; கோபத்தைக் கொன்றவர். இந்திரிய சபல தாபத்தை வென்றவர்; பகைவருக்கும் நன்மையே செய்பவர்; மலர்ந்த முகமுடையவர்; கருணை ததும்புங் கண்களுடையவர். சிறிய எறும்புகளும் அவர் காலின் கீழ் அகப்பட்டதில்லை. எந்த உயிருக்கும் தீங்கின்றி வாழ்பவர். பால்போன்ற மனமுடையவர்.

இத்தகைய நற்குணசீலருக்கு ஒரு மனைவி வாய்த்தனள். அவள் பேர் வீராயி. அவள் பேசினால் வீட்டிலுள்ள பாண்டங்களதிரும். நடந்தால் அடுத்த வீட்டிலுள்ள பாண்டங்கள் விழும். சண்டையிட்டால் ஊரடங்கும்; அவள் ஒருபோதும் மெல்லப் பேசியதே இல்லை. அவளுக்குச் சண்டையென்றால் சர்க்கரை. பாதகமென்றால் பாற்சோறு. கணவன் ஒரு துரும்பு; கணவனை வைவது கரும்பு; அவள் கை ஒரு சிறு நொய்யையும் ஒருவருக்குக் கொடுத்ததில்லை. சுருங்கச்சொன்னால் வெங்கடேச பிள்ளை பல பிறப்புக்களிற் செய்த பாவங்களெல்லாந் திரண்டு ஒரு உருவெடுத்ததுபோல் வீராயி யின்றனள். அவள் இடியைப்போன்ற பெருவாய் திறந்து பேச ஆரம்பித்தால், பாவம்! வெங்கடேச

பின்னை "சிவனே" என்று வீட்டைவிட்டு வெளியே போய்விடுவர். அவள் குரலைக்கேட்டு இடியேறுண்ட நாகம்போல் நடுங்குவர்.

"ஓ பழநியப்பா! பரமகருணாநிதி! நான் என்ன பாவஞ் செய்தேனோ? இந்தப் பெண் பேயிடம் சிக்கிக்கொண்டு தவிக்கின்றேனே. அப்பனே! ஆறுமுகத்தரசே! அந்தோ! கொடுமையே ஒரு வடிவெடுத்ததுபோன்ற இக்காதகி கையில் அகப்பட்டு அலைகின்றேன். மானத்திற்கஞ்சி மனம் புண்படுகின்றேன். இச் சனி என்று என்னைவிட்டு நீங்குமோ? உலகில் எல்லோருக்கும் ஏழரை நாட்டுச் சனி பிடித்து விலகிவிடும் எனக்கு இந்தச் சனி பலவருடங்களாகப் பிடித்து அலக்கழிக்கின்றதே! ஆகா! என்ன கொடுமை? இவளுக்கு எவ்வளவு பெரிய வாய்? இடியிடித்தாப்போன்ற குரல்; இத்தகைய அடங்காப்பிடாரியிடம் வாழ்வதைவிட கடுமபுலி வாழும் காட்டில் வாழ்வது சுகம்.

கொடிது கொடிது வறுமை கொடிது
அதனினுங் கொடிது இளமையில் வறுமை
அதனினுங் கொடிது ஆற்றொணாக் கொடுநோய்
அதனினுங் கொடிது அன்பிலாப் பெண்டிர்
அதனினுங் கொடிது
இன்புற அவர்கையில் உண்பதுதானே.

என்றுகூறிய தமிழ்மூதாட்டியின் அநுபவமே அநுபவம். ஆ! ஆ!! எவ்வளவு உலகியல் தெரிந்து சொல்லியுள்ளார், சீ சீ! இந்த வாழ்வு ஒரு வாழ்வா?" என்று வருந்துவர்.

ஒருநாள் வெங்கடேசப்பிள்ளைக்கு வாழைப்பூவடை தின்ன வேண்டுமென்று அவாவுண்டாயிற்று. அதற்குரிய வாழைப்பூ, ஒருபடி கடலைப்பருப்பு, ஒருபடி நல்லெண்ணெய், வெங்காயம், பூண்டு, பச்சைமிளகாய், பச்சைகறிவேப்பிலை, பச்சைகொத்தமல்லி முதலியவைகளை வாங்கிவந்து வீராயியிடம் தந்து "வாழைப்பூ வடை செய்" என்றார். அவள் "நீ கெட்ட கேட்டிற்கு வடை கூட வேண்டுமா?" என்றாள். "இல்லை; செய்தால் எல்லோருக்கும் ஆகும். எனக்கும் ஆகும்" என்று நயமாகச் சொன்னார். அவள் "அப்படியானால் வீட்டில் எல்லோரும் நாளைக்கு அடுத்த ஊர் மாரியம்மன் திருவிழாவுக்குப் போய்விடுவர். நாளைக்குச் செய்தால் நீயும் நானுமாகவே சாப்பிடலாம்" என்றாள். "உன் விஷ்டம்போல்செய்' என்று வெங்கடேசம்பிள்ளை வெளியிலே போய்விட்டார். மறுநாள் வீட்டிலுள்ளவர்கள் அனைவரும் மாரியம்மை விழாவிற்குப் போய்விட்டார்கள். வீராயி மிக்க குதூகலத்துடன் பருப்பை ஊரவைத்து ஆட்டி வெங்காயம் பூண்டு இவைகளைத் திருத்தி, எண்ணெய் சட்டி வைத்து மிக்க

சுவைபட வாழைப்பூ வடை சுடத் தொடங்கினாள். ஒவ்வொன் ருகச் சுட்டுசுட்டு வயிற்றுக்குள் வைத்துக்கொண்டே இருந்தாள். சுமார் 100 வடை தின்றுவிட்டாள். முடிவில் ஒரே ஒரு வடை தான் மிச்சம். "போனால் போகட்டும் அந்த ஆளுக்குத் தரு வோம்" என்று அதனைக் கணவனுக்கென்று வைத்திருந்தாள். பகல் 1 மணிக்கு வெங்கடேசபிள்ளை சாப்பாட்டிற்கு வந்தார். வழக்கம்போலே தானே இலைபோட்டுக்கொண்டு உணவு படைத் துக்கொண்டு சாப்பிடத் தொடங்கினார். வீராயி ஒரு கனைப்பு கனைத்துக்கொண்டு வந்தாள், "ஓ! சாப்பாட்டுக்கு வந்து விட்டீரோ?" என்றாள். அவர் "ஏன்? நீ சாப்பிட்டுவிட்டாயோ?" என்றார். வீராயி, "பாதி ஜீரணங்கூட ஆய்விட்டது" என்றாள்: வெங்கடேசபிள்ளை ஏன் இன்றைக்கு வடை சுடுவதாகச் சொன்னாயே?.........என்றார். வீராயி சுட்டிருக்கிறேன்; இந் தாரும்" என்று அவருக்கென்று மிகுதிப்படுத்திவைத்த சிறிய அளவிலுள்ள ஒரு வடையைக் கொணர்ந்து இலையில் படைக்க வந்தாள். வெங்கடேசபிள்ளை, "என்ன இது? ஒரு வடை கொணர்கின்றாயே? எத்தனை வடையாயிற்று? ஒருபடி பருப்பு வாங்கி வந்தேனே?" என்றார். வீராயி 100 வடைக்குமேல் ஆயிற்று" என்றாள். அவர் "மற்றதெல்லாம் எங்கே?" என்றார். வீராயி, "ஏன்? நான் சுடும்போதே ருசிபார்த்துவிட்டேன்" என்றாள். வெங்கடேசபிள்ளைக்கு வயிறெரிந்துவிட்டது. "அடி பாவி! நூறுவடையை எனமாடி விழுங்கினாய்" என்றார். வீராயி, "இப்படித்தான் விழுங்கினேன்" என்று அந்த ஒரு வடையையும் வாயில் போட்டு மென்று விழுங்கிவிட்டாள். அவர் அப்படியே சிறிதுநேரம் அசைவற்றிருந்தார். நெடுநேரம் பொறுத்து ஒரு பெருமூச்சுவிட்டு, "அப்பா! என்ன பெண் பிறப்போ இது?" என்று தனக்குள் சொல்லிக்கொண்டார். அது அவள் காதில் விழுந்திருந்தால் அவரையும் விழுங்கியிருப் பாள். (இப்படி இந்தக் கதையை மாதினியாள் கூறும்போது மகுடேஸ்வரன் விழுந்துவிழுந்து சிரித்தார். பெண்ணே! இப்படி ஒரு பெண் இருந்தாளா? ம்......அப்பால் என்ன ஆயிற்று? என்றார். மாதினியாள் பொறுமையாகக் கேளுங்கள்! என்று மீண்டுங்கூறுவாளாயினள்.)

ஒருநாள் வெங்கடேசபிள்ளை பூசை அறையில் இருந்து முருகப்பெருமானைப் பூசித்துக்கொண்டிருந்தார். வீராயி "இந்தப் பாழாய் போவானுக்கு பூசை வேறு வேணுமா? பூசை பண்ணி பூசை பண்ணி என்ன பலனைக்கண்டார்? பூனைமாதிரி உட்கார்ந்துகொண்டு உறங்குகின்றனர். முணுமுணுவென்று உதட்டை அசைத்து குடிகெடுக்கின்றார்" என்று வசவுமாரி

ஏராளமாகப் பொழிந்துகொண்டிருந்தாள்; இடி இடித்தது போன்ற அந்தப் பெருங்குரலைக்கேட்டு "முருகா! முருகா! நீதான் இவளுக்கு நல்ல புத்தியைத் தரவேண்டும்" என்று அவர் ஆண்டவனைப் பார்த்துக் கூறினர். அது எப்படியோ அவள் காதில் விழுந்துவிட்டது. உடனே ஓடி பானையில் இருந்த தண்ணீரைக் கொண்டுபோய் பானையோடு அவர் தலையில் போட்டாள். அந்தப் பரமசாந்த சிகாமணி அதைக்கண்டு கோபிக்கவில்லை. "ஆண்டவனே! முன்னே இடிஇடித்தது; இப்போது மழை பொழிந்தது" என்றுகூறி சிரித்தார்.

இப்படி சிலநாட்கள் கழிந்தன. கந்தசஷ்டி புண்ணிய நாள் வந்தது. வெங்கடேசபிள்ளை முந்தினநாளே மனைவியைப்பார்த்து "பெண்ணே! நாளை கந்தசஷ்டி; நான் உபவாசம். சாப்பிட மாட்டேன். எனக்கு சமைக்கவேண்டாம். முன்னடியே தெரிவித்துவிட்டேன். பிறகு நீ ஏன் முன்னாலேயே சொல்லக் கூடாது? உனக்காக சமைத்ததை யார் தின்பார்கள் என்று வம்பு செய்யாதிருக்கும்பொருட்டு இப்போதே கூறிவிட்டேன் என்ருர். வீராயி, "ஒன்றுமே சாப்பிடமாட்டீரோ?" என்ருள். "பழங்கள் சாப்பிடுவேன்" என்ருர்

மறுநாள் வெங்கடேசபிள்ளை அதிகாலையில் எழுந்து நீராடி பூசையறைக்குள்போய் முருக விக்ரகத்திற்கு அபிஷேக ஆராதனை செய்துகொண்டிருந்தார். வீராயி சமையல் பண்ணி விலாப் புடைக்கத்தின்றுவிட்டு, ம்......அவர் ஒன்றும் சாப்பிடமாட்டா ராம்; பழங்கள் சாப்பிடுவாராம். மற்ற நாளிலே புதுக் கள் சாப்பிடுவார்போல் தோன்றுகின்றது. விரத நாளிலே பழங்கள் சாப்பிடுவது வழக்கம்போலும் என்று சொல்லி, வேலைக்கார னிடத்தில் பணத்தைக்கொடுத்து 2. 3 நாளைக்குமுன் புளிப்பேறிய பழங் கள்ளை வாங்கிவரச்செய்து, ஒரு குடுவையில் நிரப்பி பூஜை அறையில் புருஷனிடங்கொண்டுபோய் வைத்தனள். அதனை அவர் பார்த்தார். கள் நாற்றம் மூக்கைத் தொளைத்தது. பொறுக்கமுடியாத மனவேதனையடைந்தார். "என்னடீ இது? கள்ளைக் கொண்டுவந்து இங்கே வைக்கின்றனையே? உனக்கு என்ன பித்துப் பிடித்துவிட்டதா?" என்ருர்.

வீராயி, "ஏது தலைமண்டை கொழுத்துவிட்டாப்போலிருக் கின்றது. எனக்கா பித்து? உனக்குத்தான் பித்து. நேற்று பழங் கள் சாப்பிடுவேன் என்று இந்த வாய்தானே சொல்லியது; அதற்குள் மறந்துவிட்டீரோ?" என்ருள். பாவீ! பழங்கள் என்ருல் பழ வகைகள் என்றல்லவா கூறினேன். நீ இப்படி அர்த்தம் பண்ணிக்கொண்டு பழங் கள்ளைக்கொண்டுவைத்து அநியாயமாக என் பூஜைக்கே கேடு செய்தனையே? நீ நாசமாகப்

போக; கடவுள்தான் உனக்குக் கூலிதரவேண்டும். ஏண்டி இப்படி எனக்கு திராத மண்டையிடியாகவந்து தொல்லை செய்கின்றாய்? என்று சற்று வயிறெரிந்து தைரியமாக வைதுவிட்டார். அதைக் கேட்டவுடனே அவள் ரணபத்ர காளிபோல் சீறி ஒரு ஆட்டம் போட்டாள். "ஓகோ! ஏது? இவ்வளவுதூரம் மிஞ்சிவிட்டாயோ? என்னை பாவிஎன்று வைய உனக்கு அவ்வளவு தைரியம் வந்துவிட்டதோ? நீயும் நீ பூசைபண்ணும் சாமியும் நாசமாகப் போக; எனக்கு இருக்கும் புத்தியில் ஆயிரத்தில் ஒரு பங்கு கூட அருந்ததிக்கு இராது; என்னைப்போல பொறுமைசாலி பூலோகத்திலேயே கிடையாது. தெரியுமா? இனியாவது இந்த மாதிரி வாய்மிஞ்சிப்பேசி பேய்போல் திரியாதே" என்று அவரைக் கண்டபடி வைது அவர் அபிஷேகஞ் செய்துகொண்டிருக்கும் முருகமூர்த்தியைப் பிடுங்கிக்கொண்டுபோய் அவர்கள் தோட்டத்தில் உள்ள பெரிய கிணற்றில் போட்டுவிட்டாள்.

அதுகண்ட அவருக்கு உள்ளம் பதறியது; உடல் நடுங்கிற்று. கண் சுழன்றது; தாங்கமுடியாத துன்பத்தையடைந்தார். சிறிது கோபமும் உண்டாயிற்று. "அடி பாதகி! என் ஆண்டவனைக் கொண்டுபோய் கிணற்றில் போட்டனையே; இனி இந்த உலகில் இருக்கமாட்டேன். உயிரை மாய்த்துக்கொண்டு உன்மேல் பழியைப் போட்டுவிடுவேன்" என்றார்.

**வீராயி:—** ஓகோ! உயிரைவிட்டு என்மேல் பழிபோடப் போகின்றீரோ? சபாஷ் ரொம்ப நல்லதாகப் போச்சு. நீர்போனால் உலகமே போய்விடுமோ? சரி இருக்கட்டும். எப்படி உயிர்விடப்போகிறீர்?

**வெங்க:—** என்னுண்டவனை எந்தக் கிணற்றில் போட்டாயோ அதே கிணற்றில் நானும் விழுந்து உயிர்விடப் போகின்றேன்.

**வீராயி:—** சரி. சரி. இப்போதே என்னெதிரிலேயேகிணற்றில் விழுந்து சாகு. (என்று கணவன் கையைப் பிடித்துக் கிணற்றுவரை இழுத்துக்கொண்டு போனாள்.)

**வெங்க:—** அடியே! என் கையை விட்டுவிடு; நானே விழுந்து மாள்கின்றேன். உன்னிடமிருந்து துன்புறுவதைவிட கிணற்றில் விழ்ந்து உயிர்விடுவதே தேவலை.

**வீராயி:—** சரி. விழு. நீ இறந்தால் உழக்கரிசி மிச்சம். பூமிக்குப் பாரமாக நீர் இருந்து என்னபயன்?

உடனே வெங்கடேசம்பிள்ளை சிறிதுதூரம் பின்னுடிபோய் அங்கிருந்து வேகமாக ஓடிவந்து கிணற்றினிடம் வந்து விழாமல்

திகைத்து நின்றார். வீராயி கலகலவென்று சிரித்து "ஏன் விழாமல் விழித்துக்கொண்டு நிற்கின்றீர்? பயந்துபோய்விட்டீரோ? தெரியும் தெரியும் உமது வாய்ஜாலம். கிணற்றில் விழுவேனென்றால் நான் பயந்துபோய்விடுவேனென்று பார்த்தீரோ? அதற்கெல்லாம் நான் பயப்படுகின்றவளல்லன். பனங்காட்டுநரி சலசலப்புக்கு அஞ்சுமோ? ஏன் சும்மா பார்க்கிறீர்? விழும்." என்றாள்.

வெங்கடேசபிள்ளை "அடியே! சும்மா கத்தாதே. நான் கிணற்றில் விழுவதற்கும் உயிர்விடுவதற்கும் பயப்படவில்லை. எனக்கு நீந்தத் தெரியும். விழுந்தாலும் நீந்திக்கொண்டு கரை சேர்ந்துவிடுவேன். அதுவுந்தவிர நானே விழுவதென்றால் சற்று அச்சமாக இருக்கின்றது. என் இரு கரங்களையும் நன்றாகச் சேர்த்துக் கட்டிவிடு. நான் கிணற்றோரம் நிற்கின்றேன். நீ ஓடி வந்து என்னைத் தள்ளிவிடு" என்றார். வீராயி "அப்படியே செய்கிறேன்" என்று ஓடி நீண்ட ஒரு கயிறு கொண்டுவந்து கணவனுடைய இரு கரங்களையும் நன்றாகப் பிணித்துக் கட்டி விட்டனள். வெங்கடேசப்பிள்ளை "சரி நீ பின்னாடிபோய் ஓடி வந்து என்னைத் தள்ளிவிடு" என்றார். அவ்வாறே வீராயி பின்னுக்குப்போய் அங்கிருந்து வேகமாக ஓடிவந்தாள். கிணற்றோரம் வந்ததும் வெங்கடேசபிள்ளை திடீரென்று ஒதுங்கி விட்டார். வீராயி வேகமாக வந்தாளாதலால் கிணற்றில் அவளே விழுந்தாள். தண்ணீருக்குள் போய் திக்குமுக்காடினாள். தூக்கி விடுமாறு கையை ஆட்டினாள். வெங்கடேசபிள்ளை "என்னுடைய கையை நீயே கட்டிவிட்டனை; நான் எப்படி உன்னை எடுக்க முடியும்" என்று வீட்டிற்குப்போனார். வீராயி நரகலோகம் போனாள்.

பின்னர், முருகன் திருவுருவத்தை எடுத்து வீடு நிலங்களையெல்லாம் ஏழைகட்குத் தானங்கொடுத்துவிட்டு முருகப்பெருமான் எழுந்தருளியுள்ள திருத்தலங்கள்தோறும் சென்று வழிபடுவாராயினர் என்று மாதினியாள் இக்கதையைக் கூறி முடித்தனள்.

மகுடேஸ்வரன், "இவ்விதமான பெண்களும் இருக்கின்றார்களா? ஆனால் நான் உன்னை வாழ்க்கைத்துணைவியாகக்கொண்டது எனது பூர்வபுண்ணியமே" என்று கூறினன். முருகப்பெருமானை இருவரும் வழிபட்டு இனிது வாழ்ந்தனர்

# உள்ளங் கவர் கள்வன்.

(வே. ஆ. தணிகாசலம், கண்டாச்சிபுரம்.)

இச்சிறந்த உலகில் பலவகைப் பிறவிகளுள் மிக உயர்ந்த ஒன்று மனிதப்பிறவி. இப்பிறவியின் அருமையை நமது ஆசாரிய சுவாமிகள் "வாய்த்தது நந்தமக்கு ஈதோர் பிறவி மதித்திடுமின்" என்று கூறியிருக்கிறார்கள். இதைக் குறித்து சேக்கிழார் சுவாமிகள் நம் சுந்தரமூர்த்தி சுவாமிகளை வணங்கக் கிடைத்த இந்தப் பிறவிக்கு ஒரு நமஸ்காரம் செய்கின்றேன் என வருமாறு கூறுகிறார்கள்.

**நேசம் நிறைந்த உள்ளத்தால் நீலம் நிறைந்த மணிகண்டத்**
**தீச னடியார் பெருமையினை எல்லா உயிருந் தொழ எடுத்துத்**
**தேச முய்யத்திருத்தொண்டத்தொகைமுன் பணித்ததிருவாளன்**
**வாச மலர்மென் கழல்வணங்க வந்த பிறப்பை வணங்குவாம்.**

அரிய மனிதப் பிறவியை அடைந்த நாம் பல பொருள்கள் உடையோம். அவற்றுள் மிகச் சிறந்தது அறிவு. இதுபற்றியே "அறிவுடையார் எல்லாமுடையர், அறிவிலார் என்னுடைய ரேனு மிலர்" எனத் தமிழ் மறை கூறியிருக்கிறது. இவ்வறிவு ஆராய்ச்சியறிவு அனுபவஅறிவு என இருவகை. முன் ஆராய்ச்சியறிவும், பின் அநுபவ அறிவும், விளங்கும். ஆராய்ச்சிக்கு மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐந்து கருவிகள் உதவிசெய்கின்றன. ஆராயுமி பொருள்கள் மூன்று வகையன. அவை, மானிடர்களாகிய நாம் பார்க்கக் கூடிய பொருள்கள், ஆராய்ச்சியால் அடையக்கூடிய பொருள்கள் என்பன. நாம் பார்க்கக்கூடிய பொருள்கள் அறியுந்தன்மையுடையன; ஆனால் அழியுந்தன்மையுடையன. ஆகவே ஆராய்ச்சியால் அடையக்கூடிய பொருளாகிய அழியாப்பொருளாகிய மாற்றமனம் கழிய நின்ற மறையோனை அடைய முயற்சிக்க வேண்டும். இன்றேல் இவ்வுலகப் பொருள்களினால் துன்பமேயெய்துவோம். இக்கருத்துப்பற்றியே சிவஞானப்பால் ஊட்டப்பெற்ற

நற்குழந்தை "துயர் இலங்கும் உலகில்" என்ற தெளிவான கருத்தை நமக்கு அறிவிக்கிறது. துயர், துன்பம் என்பது ஒரு பொருட் பதங்கள். துயர் என்பதற்கு பிறவித் துன்பமெனினும் பொருந்தும். இத்துன்பத்தைப் போக்க வேண்டும். இல்லையேல் கிடைத்தற்கு அரிய இப்பிறவி யினால் பயனில்லை.

ஆர்த்த பிறவித்துயர் கெட நாம் ஆர்த்தாடும். தீர்த்தன் என்பது மணிவாசகம்: எனவே பிறவித் துன்பத்தைப் போக்க நம் ஒவ்வொருவருடைய உள்ளம் ஆண்டவன் ஆலயமாகவேண்டும். நம் உள்ளத்தை இறைவன் கவரும் நிலையில் செய்துகொள்ளுதல் வேண்டும் சிவம் பெருக்கும் சம்பந்தர் இத்தகைய நிலை தனக்கு வாய்த்ததை " உள்ளங் கவர் கள்வன் " எனக்கூறியிருக் கிறார்கள். யோகீஸ்வரர்களும் பார்க்கமுடியாத உயிர்க் குயிரான கடவுளை எக்காலத்தும் யாவரும் பார்க்கலாம் என்பதை ஞானசம்பந்தர் காட்டினார். அவர் பார்ப்பார்; மற்றவர்க்கும் காட்டுவார். இது கட்டுக் கதையன்று. நாமும் கடவுளைக் காணலாம், மற்றவர்க்கும் காட்டலாம். தலைமயிர் தீப்பிடிக்கப்பெற்றவன் தண்ணீரைத் தேடுதல் போல் எப்படியாவது அவனைத் தேடிக்காணவேண்டும். ஆண்டவன் இருக்கும் இடத்தைத் தேடவேண்டும் .தேடி யறிந்து ஏங்கி யேங்கி அழுதாற் பெறலாம்.

> உள்ள முருகி னுடனுவ ரல்லது
> தெள்ள வரியரென் றுந்தீபற
> சிற்பரச் செல்வரென் றுந்தீபற—என்பது திருவுந்தியார்.

ஆண்டவன் இருக்கும் இடம் உயிர்களின் உள்ளம். உள்ளம் என்பதற்கு மனம், சிந்தை என்பது பொருளா கும். ஆனந்த வெள்ளம் உள்ளே யிருக்கிறது. வெள்ளத் தின் நடுவேயிருந்தும் நீர் பருகாது தாகத்தால் நாவானது உலர்ந்துபோனாற்போல உன் அருள் வெள்ளத்தைப் பெற்றும் துன்பத்தினின்றும் நீங்குதற்கு ஆற்றலில்லாத வனாகிய என்னைக் கைவிட்டிடாதே என்ற பொருள்பட மணிவாசகர் வருமாறு கூறியிருத்தல் காண்க.

வெள்ளத்துள் நாவற்றி யாங்குன் அருள்பெற்றுத் துன்பத்தி னின்
விள்ளக்கி லேனை விடுதிகண் டாய் விரும்பும் அடியார், [றும்
உள்ளத்துள் ளாய் மன்னும் உத்தர கோசமங் கைக்கரசே
கள்ளத்து ளேற்கரு ளாய்களி யாத களியெனக்கே"

இன்னும் "நெஞ்சகத்தான்" "மனத்தகத்தான்" "மனத்தின் மிசையார்" என்ற தேவாரப் பொன்மொழிகளும், மலர் மிசையேகினான் என்ற தமிழ்மறை நன்மொழியும் இக் கருத்தை வலியுறுத்தும். அறிவு மயமான ஆனந்தவடிவ மான ஒன்றை அறியவேண்டும். அதுவே சிவம். அச் சிவம் அருதியானது; அத்தகைய சிவத்தைக் காணவேண் டும். துன்பம் நீங்கி இன்பமடைவோம் சிவன் ஆண்டவன்; சிவன் அடிமை யென்ற உணர்ச்சி உள்ளத்தில் தைக்க வேண்டும்: தன்முனைப்பொழிந்து தாழ்மையான மனத் தினை யுடையராதல் வேண்டும். இதனால் உலகப்பற்றும் மலப்பற்றும் அறும். திருவருள் நெறியில் நிற்போம். சிவபெருமான் இவ்வுலக வாழ்வையும் தனு, கரண, புவன, போகங்களையும் கொடுத்தது எதற்காக? இவ்வுலகில் நாம் இறைவன் ஆணைப்படி செந்நெறி வாழ்க்கையை நடத்த வும், மலப்பற்று நீங்கி அவனைச்சேர்ந்து பேரின்பம் அடைதற்காகவுமேயாம். இதை அறியவேண்டியதும் அவசியமாகும்.

கருணைக்கடலாகிய கடவுள் உயிர்களின் உள்ளத்திற கலந்து மலத்தைப் போக்கி சிவபோகத்தை நுகர்வித்து பக்குவம் வருவிப்பதற்கு திரோதான சத்தி எனப்படும். "உள்ளமே புகுந்துநின்றார்," மருவி என் சிந்தை புகுந்தாய் போற்றி," என நாவரசரும், "திருந்தித் திருத்தி வந்தென் சிந்தையிடங்கொள் கைலாய" என சுந்தரரும் கூறியிருத் தல் காண்க. இக்கருத்துக்களையெல்லாம் மிகவும் தெளி வாக மணிவாசகரும், வாக்கின் மன்னரும் வருமாறு கூறியிருக்கிறார்கள்.

"உருத்தெரியாக் காலத்தே உள்புகுந்தென் உளம்மன்னிக்
கருத்திருத்தி ஊன்புக்குக் கருணையினால் ஆண்டுகொண்ட
திருத்துருத்தி மேயானைத் தித்திக்குஞ் சிவபதத்தை
அருத்தியினால் நாயடியேன் அணிகொள் தில்லை கண்டேனே.
"வெள்ளநீர்ச் சடையனார்தாம் வினவுவார் போலுந்தென்
உள்ளமே புகுந்து நின்றார்க் குறங்குநான் புடைகள் போந்து
கள்ளரே[illegible]ந்தீ ரென்னக் கலந்துதான் நோக்கி நக்கு,
வெ[illegible]ர் விளங்கிலம் பிறையனாரே"

**கந்தரநுபூதி** (உரையுடன்). நமது திருப்புகழமிர்தத்தில் வெளிவந்தது; விலை ரூ 1-0-0 தபாற் செலவு ரூ 0—5—0

திருப்புகழமிர்தம் ஆபீஸ், காங்கேயநல்லூர்.

---

**ஒட்டக்கூத்தர் மடாலயம்**

கலியாணபுரம், கஞ்சனூர் தபாற்சாலை, விழுப்புரம் மார்க்கம்.

இம்மடாலயம் சிவஞானயோகி முருகானந்த சுவாமிகளால் இந்தியா, இலங்கை, இரங்கூன் முதலான பலநாட்டு அன்பர்கள் பொருளுதவிகொண்டு கட்டப்பட்டது. நிகழும் தாரண ஆண்டு ஆவணித்திங்கள் 10-ஆம் நாள் வெள்ளிக்கிழமை சுவாதி நட்சத்திரம் கூடிய சுபதினத்தில் உதயாதி நாழிகை 8½க்குமேல் 10¼க்குள்ளாக துலா லக்கினத்தில் கும்பாபிஷேகம் நடைபெறும்.

---

**வெகு சரசம்! உத்திரவாதம்!!**

**எங்கள் சொந்த தறியில் தயார் செய்யும்**

**பட்டு-பாவாடை, ஜரிகை-ரவிக்கை,**

**பட்டு-சேலை தினுசுகள்**

**சாயத்திற்கும் ஜரிகைக்கும்**

**உத்திரவாதத்துடன் கொடுக்கப்படும்.**

**வேண்டியவர்கள் உடனே ஆர்டர் செய்யவும்**


**எஸ். ஆர். ஆதிநாராயண முதலியார்,**

**எஸ். எஸ். சம்பந்தமூர்த்தி முதலியார்.**

பட்ஜவுளி வியாபாரம், திருக்கச்சிநம்பிதெரு, சின்னகாஞ்சிபுரம்

---

**நம்பிக்கைப்பெற்ற ஆயுர்வேத ஔஷதங்கள்.**




சோல் ஏஜண்ட்ஸ்: யுனைடெட் கன்ஸர்ன், 54 பந்தர்தெரு, மதராஸ்.

தந்தி விலாசம் "செமந்தகா" திருச்சி.



கிருஷ்ண பரமாத்மாவின் கிரீடத்தை அலங்கரிக்கச் செய்தது செமந்தகமணி.

ஆனால்

இவ்வுலக மக்களின் அழகை அலங்கரிக்கச் செய்வது செமந்தகா வைரங்கள்.

என்று

இதுவரையில் செமந்தகா வைரங்களை வாங்கிப் பூரண திருப்தி அடைந்தவர்களால் போற்றப் படுகிறது.

இன்றுவரை வெளிவந்துள்ள வைரங்களில் தலை சிறந்தது.

எமது

"செமந்தகா வைரங்களே"

உறுதியிலும் ஜொலிப்பிலும் அசல் வைரங்களைப் போன்றது.

ஒரு முறை பரிக்ஷித்துப்பாருங்கள்

தோடு சைஸ் வைரம். பேசரி சைஸ் வைரம்.
1-க்கு 1—0—0. 1-க்கு 0—14—0.

கிடைக்குமிடம்:---

மோதிரங்கய்ய செட்டியார் சன்

நகை வியாபாரம், திருச்சி.

மற்ற ஊர்களில் எமது அதிகாரம் பெற்ற ஏஜண்டுகளிடம் மட்டும் கிடைக்கும்

ஏஜண்டுகள் தேவை.

Edited by Thirumuruga KIRUPANANDAVARI; Printed & Published by M. MADHUSOODANA SIVAM, at the THIRUPPUGAL AMIRTHAM PRESS, Kangayanellur, Via Katpadi, N. A.